2003 ஏப்ரல் 24]

அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அடிப்படையில் சென்ற ஆண்டு--2002-2003 ஆம் ஆண்டு--460 கோவில்கள் ஒரு கால பூஜைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மீண்டும் எங்கெல்லாம் ஒரு கால பூஜை நடைபெறாமல் இருக்கிறதோ அந்த ஆலயங்கள் எல்லாம் கண்டறியப்பட்டு அங்கே எல்லாம் ஒரு கால பூஜை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 308, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

308--

அவசர ஊர்தி

***8189—திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரில் அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டு பகுதித் திட்டத்தின்கீழ் 20 புதிய ஆம்புலன்ஸ் ஊர்திகள் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கி அதற்கேற்ப திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஒரு ஆம்புலன்ஸ் வண்டி வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழங்கல் ஆணையும் Supply Order சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் ஆம்புலன்ஸ் கிடைத்துவிடும். எனவே அந்த மருத்துவமனைக்கு இன்னும் ஒரு மாத காலத்திற்குள் ஆம்புலன்ஸ் வந்துவிடும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. கே.கே. உமாதேவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாரி வழங்கும் அம்மா அவர்கள் ஆட்சியில், கேட்டதைக் கொடுக்கின்ற அம்மா அவர்கள் ஆட்சியில் ஆம்புலன்ஸ் வழங்குவதாக அறிவித்த அம்மா அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 309, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

309—

சொந்தக் கட்டடம்

•24713—திரு. கே.கே. சிவசாமி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கீழ்குடி ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை; மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியை எழுதிக் கொடுத்தபோது கீழ்குடி துணை மருத்துவ சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல்தான் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாகவும் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படியும் இதுவரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த கீழ்குடியிலுள்ள துணை சுகாதார நிலையத்திற்கு நபார்டு உதவியுடன் சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.